**மே – 19**

# TNPSC துளிகள்

- இந்திய ராணுவம் துணிகர விளையாட்டில் பெண் அதிகாரிகளின் அதிகபட்ச செயல்பாட்டுத் தன்மைகளை/ஆற்றலை ஆராய்வதற்காக பகீரதி-II என்ற மலைத்தொடரை நோக்கிய, பெண் அதிகாரிகளுக்கான மலையேறும் பயணத்தைத் தொடங்கியுள்ளது.
    - பகீரதி-II மலைத்தொடரானது (6512 மீ) கங்கோத்ரி தேசியப் பூங்காவிலுள்ள கார்வால் இமாலயப் பகுதிகளில் அமைந்துள்ளது. இந்த சிகரம் கங்கோத்ரி பனிப்பாறைகளின் மேபகுதியில் அமைந்துள்ளது.

# தமிழ்நாடு செய்திகள்

## முதல் சர்வதேச இரயில் பெட்டி கண்காட்சி

- இரயில் பெட்டிகள் மீது கவனம் செலுத்துவதற்காக, முதல் சர்வதேச இரயில் பெட்டி கண்காட்சி சென்னையில் நடைபெற்றது.




- மூன்று நாள் நடைபெற்ற இக்கண்காட்சியானது, ரயில்வே அமைச்சகத்தின் கீழ் செயல்படும் ஒருங்கிணைந்த இரயில் பெட்டித் தொழிற்சாலையால் (Integral Coach Factory-ICF) இந்திய தொழிலகக் கூட்டமைப்பு மற்றும் RITES நிறுவனம் ஆகியவற்றின் கூட்டிணைவோடு நடத்தப்பட்டது.
- இக்கண்காட்சியானது, பல்வேறு நிறுவனங்களை ஓரிடத்தில் கொண்டு வருவதற்கான தனித்துவ தளத்தை வழங்குவதுடன் இந்தியாவில் தயாரிப்போம் என்ற திட்டத்திற்கான ஒத்திசைவையும் (Synergy) வழங்குகிறது.

# தேசியச் செய்திகள்

## உயிரி எரிபொருள் மீதான தேசியக் கொள்கை

- நாட்டில் உயிரி எரிபொருள் பயன்பாட்டை ஊக்குவிப்பதற்காக உயிரி எரிபொருள் மீதான தேசியக் கொள்கை 2018-க்கு மத்திய அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.
- உயிரி எரிபொருள் வழங்கலானது (Supply) பின்வருவனவற்றை அடைவதற்கும் உதவி புரிகிறது.
    - கச்சா எண்ணெய்யின் இறக்குமதி சார்பை குறைப்பதற்கு உதவுகிறது. இது அந்நியச் செலவாணி இருப்பை சேமிப்பதற்கு உதவி புரியும்.
    - காய்ந்த வேளாண் பயிர்களை எரிப்பதை குறைப்பதன் மூலம் $CO_2$ வெளியீடுகள் மற்றும் பசுமை இல்ல வாயுக்களின் வெளியீடுகளைக் குறைத்தல் மற்றும் வேளாண் கழிவுகளை உயிரி எரிபொருட்களாக மாற்றுதல் ஆகியவற்றில் உதவி புரிகிறது.
- ஒவ்வொரு பிரிவின் கீழும் ஏற்கத்தகு நிதிகள் மற்றும் நிதியியல் ஊக்கத் தொகைகள் ஆகியவற்றை விரிவாக்குவதற்கு இயலச் செய்திட இந்த கொள்கை உயிரி எரிபொருட்களை வகைப்படுத்துகிறது.

| | |
|---|---|
| அடிப்படை உயிரி எரிபொருள்கள் | முதல் தலைமுறை உயிரி எத்தனால் மற்றும் உயிரி டீசல் |
| மேம்படுத்தப்பட்ட உயிரி எரிபொருள் | இரண்டாம் தலைமுறை எத்தனால், நகராட்சி திடக்கழிவு முதல் எரிபொருள்கள், மூன்றாம் தலைமுறை உயிரி எரிபொருள், உயிரி - CNG. |

# சர்வதேசச் செய்திகள்

## முதல் முக்கியமான நோய்க்குறி சோதனை பட்டியல்

- உலக சுகாதார நிறுவனம் தன்னுடைய முதல் முக்கியமான நோய்க்குறி சோதனைப் பட்டியலை வெளியிட்டுள்ளது. இப்பட்டியலானது பொதுவான நோய்கள் மற்றும் உலகளவில் முன்னுரிமை அளிக்கப்படக்கூடிய நோய்கள் ஆகியவற்றை சோதனை செய்வதற்குத் தேவையான நோயைக் கண்டறியும் சோதனைகள் அடங்கிய பட்டியலாகும்.
- இப்பட்டியல் மக்களின் நோய்க்குறி சோதனை சேவைகளை அணுக இயலாத தன்மையை குறிப்பிட்டுக் காட்டுவதுடன் சரியான மருத்துவ சிகிச்சையை அவர்கள் பெறுவதற்கு வழிவகை செய்கிறது.
- இந்த முக்கியமான நோய்க்குறி சோதனைப் பட்டியலானது, இரத்தப் பரிசோதனை மற்றும் சிறுநீர் பரிசோதனை ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது.

# பொருளாதாரச் செய்திகள்

## இந்தியாவால் அர்ப்பணிக்கப்பட்ட முதல் முதலீட்டு நிதி

- சீன அரசாங்கத்தால் நடத்தப்படும் முன்னணி வங்கியான சீன தொழில்துறை மற்றும் வணிக வங்கி (The Industrial and Commercial Bank of China - ICBC) இந்தியாவால் அர்ப்பணிக்கப்பட்ட சீனாவின் முதல் முதலீட்டு நிதியை தொடங்கியுள்ளது.
- ICBC கிரடிட் சுசீ இந்திய சந்தை நிதி என இந்நிதிக்கு பெயரிடப்பட்டுள்ளது. ICBC ஆனது 3.6 டிரில்லியன் டாலர்கள் சொத்து மதிப்புடன் உலகின் மிகப்பெரிய வங்கியாக திகழ்கிறது.
- ICBC கிரடிட் சுசீ இந்திய சந்தை நிதியானது, ஐரோப்பா மற்றும் அமெரிக்காவிலுள்ள 20க்கும் மேற்பட்ட பரிமாற்றங்களில் பட்டியலிடப்பட்டுள்ள பரிமாற்று வர்த்தக நிதியத்தில் முதலீடு செய்யும். இந்த முதலீடுகள் இந்திய சந்தையை அடிப்படையாகக் கொண்டது.
- இந்த நிதியானது, சீன முதலீட்டாளர்களுக்கு இந்தியாவில் முதலீடு செய்வதற்கான வழிமுறையை ஏற்படுத்தித் தருவதோடு முதலீடு செய்வதற்கான குறைந்தபட்ச தொடக்க நிலைக்கான (Low Threshold) சிறந்த வழியையும் ஏற்படுத்தித் தருகிறது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச்செய்திகள்

## மரபணு மாற்றப்பட்ட கடுகு

- மரபணுப் பொறியியல் மதிப்பீட்டுக் குழுவானது (Genetic Engineering Appraisal Committee - GEAC), மரபணு மாற்றப்பட்ட கடுகான தாரா கலப்பின கடுகின் (Dhara Mustard Hybrid→DMH-11) வணிக ரீதியான பயிரிடலுக்கு, அவை அதிகளவிலான பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட வேண்டும் எனத் தெரிவித்துள்ளது.
- DMH-11 என்பது மரபணு மாற்றப்பட்ட கடுகாகும். இந்தக் கடுகானது, டெல்லி பல்கலைக்கழகத்திலுள்ள பயிர் தாவரங்களின் மரபணு பெருக்கத்திற்கான மையத்தைச் சேர்ந்த அறிஞர் குழுவினால் உருவாக்கப்பட்டது. இந்த முயற்சியானது, டெல்லி பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தரான திரு.தீபக் பென்ந்தால் அவர்களின் தலைமையில் மத்திய அரசால் நிதியளிக்கப்படும் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.
- DMH-11 பூச்சிக்கொல்லிகளைக் தாங்கக் கூடிய மரபணு மாற்றப்பட்ட கடுகின் வகையாகும்.
- மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாறுபாடு அமைச்சகத்தின் கீழ் இயங்கும் GEAC ஆனது, தீமை விளைவிக்கும் நுண்ணுயிரினங்கள் /மரபணுப் பொறியியலால் உருவாக்கப்பட்ட உயிரினங்கள் மற்றும் செல்கள் ஆகியவற்றின் உற்பத்தி, பயன்பாடு, ஏற்றுமதி, இறக்குமதி, சேமிப்பு ஆகியவற்றை முறைப்படுத்தும் உச்சபட்ச அதிகாரம் கொண்ட அமைப்பாகும்.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## மைக்ரோஹைலா கோடியல்

- மைக்ரோஹைலா கோடியல்/அகன்ற வாயுடைய மங்களூரு தவளை எனப் பெயரிடப்பட்ட புதிய தவளையினத்தை கர்நாடக மாநிலத்தின் கடற்பகுதியிலுள்ள சிறிய தொழிலக மண்டலத்தில் விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.



- இத்தவளையினத்திற்கு, மங்களூரு நகரத்தின் பெயர் கொண்டு மைக்ரோஹைலா கோடியல் எனப் பெயரிடப்படுகின்றது. இங்கு தான் இரண்டாண்டுகளுக்கு முன் இவ்வகை உயிரினம் விஞ்ஞானிகளால் கண்டுபிடிக்கப்பட்டது.
- கொங்கன் மொழியில் மங்களூருவிற்கு கோடியல் என்று பெயர்.
- இவ்வகை தவளையினம், சிறிய தொழிலக மண்டலத்தில் மட்டுமே காணப்படுகிறது. இப்பகுதியானது, இதற்கு முன்னர் மரப்பொருட்கள் குவித்து வைக்கும் இடமாக செயல்பட்டது.
- இப்பகுதி, துறைமுகம், பெட்ரோ கெமிக்கல், வேதிப்பொருள் மற்றும் சுத்திகரிப்புத் தொழிற்சாலைகளால் சூழப்பட்டுள்ளது.
- மங்களூரு குறுகிய வாயுடைய தவளை, மைக்ரோஹைலா ஜீனஸ் இனத்தைச் சார்ந்தது. இவை பெரும்பாலும் தெற்காசியாவில் காணப்படுகின்றன.
- இத்தவளைகள், சாம்பல்-அரக்கு நிறம் மற்றும் அடர் ஆலிவ் பச்சை நிறத்தை அதன் தலையிலும் மங்கலான அடர் பச்சை நிறத்தை அதன் உடலின் மற்ற பகுதிகளிலும் கொண்டுள்ளது.

# மாநிலச் செய்திகள்

## முதல் அனைத்து மகளிர் தபால்நிலைய கடவுச்சீட்டு சேவை மையம்

- மகளிர் குழுவால் நடத்தப்படும் தபால்நிலைய கடவுச்சீட்டு சேவை மையம் பஞ்சாப் மாநிலத்தின் பாக்வாராவில் தன்னுடைய செயல்பாட்டைத் தொடங்கியுள்ளது.



- இந்த மையமானது நாட்டின் 192-வது தபால்நிலைய கடவுச்சீட்டு சேவை மையம் ஆகும். மேலும் இது பெண்கள் குழுவால் நிர்வகிக்கப்படும் முதல் மையம் ஆகும்.
- இது மத்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் மற்றும் தபால்துறை (Department of Post) ஆகியவற்றின் முயற்சியாகும். தபால் நிலையங்கள், தலைமைத் தபால் நிலையங்கள் ஆகியவை கடவுச்சீட்டு (Passport) தொடர்பான சேவைகளை மக்களுக்கு வழங்குவதற்காக பயன்படுத்தப்படுகின்றன.
- முதல் மையம், கர்நாடகா மாநிலத்தின் மைசூரு தலைமைத் தபால் நிலையத்தில் ஜனவரி 2017ல் தொடங்கப்பட்டது.

## SAWEN

- தெற்காசிய வனவிலங்கு அமலாக்கக் குழுவின் (SAWEN) நான்காவது கூட்டம், மேற்கு வங்க மாநிலத்தின் கொல்கத்தா நகரில் நடைபெற்றது. இது அரசுகளுக்கிடையேயான வனவிலங்கு சட்டத்தை அமலாக்கம் செய்யும் அமைப்பு ஆகும்.
- 2011 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இவ்வமைப்பின் முதல் கூட்டம் இந்தியாவில் நடைபெறுவது இதுவே முதல் முறையாகும்.
- இரண்டு நாள் நடைபெற்ற இம்மாநாட்டில், ஏழுநாடுகளின் (பாகிஸ்தானைத் தவிர) பிரதிநிதிகள் பங்கேற்றனர். இவ்வமைப்பு எட்டு உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.
- இவ்வமைப்பானது, சட்டவிரோத வனவிலங்குகள் வர்த்தகத்தின் மீதான தெற்காசிய வல்லுநர்கள் குழுவின் இரண்டாவது கூட்டத்தில் பூடான் நாட்டின் பாரோ நகரில் 2011 ஆம் ஆண்டின் ஜனவரி மாதத்தில் தொடங்கப்பட்டது.
- இவ்வமைப்பின் செயலகம் நேபாள நாட்டின் தலைநகரமான காத்மாண்டுவில்

உள்ளது. இதன் மண்டலக்குழு எட்டு தெற்காசிய நாடுகளைக் கொண்டது.

1. ஆப்கானிஸ்தான்
2. பாகிஸ்தான்
3. இந்தியா
4. நேபாளம்
5. பூடான்
6. வங்கதேசம்
7. இலங்கை
8. மாலத்தீவுகள்




# பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

## முதல் பெண் வழக்கறிஞர் – உச்சநீதிமன்ற நீதிபதி


- மூத்த வழக்கறிஞர் இந்து மல்கோத்ரா உச்சநீதிமன்றத்தின் நீதிபதியாக பதவியேற்றுள்ளார். இவருக்கு உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி தீபக் மிஸ்ரா பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.



- இதன் மூலம், பார்கவுன்சிலிலிருந்து நேரடியாக உச்சநீதிமன்ற நீதிபதியாக பதவி உயர்வு பெற்ற முதல் பெண்ணாக இவர் உருவெடுத்துள்ளார். உச்சநீதிமன்றத்தில், தலைமை நீதிபதியையும் சேர்த்து மொத்தம் 31 நீதிபதிகள் பணியிடங்கள் உள்ளன.
- நீதிபதி இந்து மல்கோத்ராவை சேர்த்து உச்சநீதிமன்றத்தில் தற்போது நீதிபதிகளின் எண்ணிக்கை 25 ஆக உயர்ந்துள்ளது.
- 67 வருடங்களுக்குமுன் உச்சநீதிமன்றம் ஏற்படுத்தப்பட்டதிலிருந்து இவர் உச்சநீதிமன்றத்தின் ஏழாவது பெண் நீதிபதியாவார். 1989 ஆம் ஆண்டு நீதிபதி M.பாத்திமா பீவி முதல் பெண் உச்சநீதிமன்ற நீதிபதியாக பதவியேற்றார்.
- 2007 ஆம் ஆண்டு நீதிபதி M.பாத்திமா பீவி உச்ச நீதிமன்றத்தால் மூத்த நீதிபதியாக அறிவிக்கப்பட்ட இரண்டாவது பெண்ணாவார். இந்தப் பெருமை, முதன் முதலாக பழம்பெரும் நீதிபதி.லீலா சேத்திற்கு 1977 ஆம் ஆண்டு வழங்கப்பட்டது.

## நிக்கி ஆசியா விருது

- சுலாப் இண்டர்நேஷனல் நிறுவனத்தின் நிறுவனரான Dr.பிந்தேஸ்வர் பதக், நிக்கி ஆசியா விருது வழங்கப்பட்டு கவுரவிக்கப்பட்டார். இவ்விருது ஆசிய வளர்ச்சியில் இவருடைய பங்களிப்பிற்காக ஜப்பானில் வழங்கப்பட்டது.



- இந்திய சமூக சீர்திருத்தவாதியாக கருதப்படும் Dr.பதக் நாட்டின் மிகப்பெரிய சவால்களில் இரண்டினை சரிசெய்துள்ளார். அவையாவன, தரமற்ற சுகாதாரம் மற்றும் பாரபட்சம் (Discrimination). இவ்விருது வழங்கப்பட்ட மூன்று நபர்களுள் இவர் ஒருவராவார்.
- இவர் சுலாப் இண்டர்நேஷனல் நிறுவனத்தை 1970 ஆம் ஆண்டு நிறுவினார். இந்நிறுவனம் மனித உரிமைகள், சுற்றுச்சூழல், சுகாதாரம் மற்றும் இன்னும் பிற சமூக சேவைகளை ஊக்குவிப்பதற்காக பணியாற்றும் அரசுசாரா நிறுவனம் ஆகும்.
- இந்நிறுவனம், சுலாப் ஃபிளஷ் கம்போஸ்டிங் டாய்லெட்டுகளை இந்தியா முழுவதும் உருவாக்கி வழங்கியுள்ளது. இந்த கழிவறைகள், சிறந்த சுகாதாரம், ஊரகப் பெண்களுக்குப் பாதுகாப்பு மற்றும் மனிதக் கழிவுகளை அகற்றும் தொழிலிருந்து மனிதர்களுக்கு விடுதலையளித்தல் ஆகியவற்றில் மிகப்பெரும் பங்களிப்பை செய்கிறது.
- Nikkei Inc ஆனது ஜப்பானிலுள்ள மிகப்பெரிய ஊடக நிறுவனங்களுள் ஒன்றாகும்.

இதுவே, நிக்கி ஆசியா விருதை 1996 ஆம் ஆண்டிலிருந்து வழங்கி வருகிறது. இவ்விருது பின்வரும் மூன்று துறைகளில் ஆசியாவில் தங்களுடைய போற்றத்தக்க பங்களிப்பை செய்வதற்கு வழங்கப்படுகிறது.

- பொருளாதாரம் மற்றும் வணிக புத்தாக்கம்
- அறிவியல், தொழில்நுட்பம்
- சுற்றுச்சூழல், கலாச்சாரம் மற்றும் சமுதாயம்

- - - - - - - - - - - - - - -